405

உ

வேலுமயிலன் துணை.





# மாரியம்மன் மீதும்
# சுப்பிரமணியர் மீதும் பாடிய
# பக்திரச கீர்த்தனங்கள்

முதற்பாகம்.

திருச்சி தாலூகா [illegible]ப்புகிராமம்
மகா-ா-ா-ஸ்ரீ
M. கருப்பண்ணன் முத்தரசரவர்கள்
இயற்றியது.

திருச்சி
ஜனானுகூல அச்சுக்கூடம்
1929

Q2:417
N29
180515

உ

வேலுமயிலும் துணை.

# மாரியம்மன்
# பத்திரச கீர்த்தனங்கள்.

## விநாயகர் துதி.

எத்திசைபுகழும் கோப்பு ஈஸ்வரி மாரியின் தேர்
சித்திரை மாதந்தன்னில் திருவிளா விளங்குங்கியாதி
பக்தியாய்ச் செந்தமிழாய்ப் பாலன் கருப்பண்ணன்பாட
சித்தி விநாயகன்தன் திருவடி வணங்கினேனே.

## சரஸ்வதி துதி.

அன்னவாகனமீதேரும் அயன்தேவி வாணிபோற்றி
பண்ணகாபரணம்பூணும் பார்வதி மாரிமீது
வண்ணமாய்த் தமிழ்கள்பாட மைந்தன் கருப்பண்ணன்நாவில்
உன்னருள் கிருபைகூர்ந்து உள்ளத்தி லிருந்தாள்வாயே,

---

சோமசேகரனருளும்— மெ. மெ.

இராகம். தேசிகதோடி, தா. ஆ.

பல்லவி.

கோப்பு நாட்டில்வாழும் முத்து மாரி வீரி வெகு
கீர்த்தியாய் விளங்குமலங் காரி தீரி தீதா கோப்பு

கண்ணிகள்

தஞ்சமென்றோர் சஞ்சலத்தைத் தீர்க்குந் தாயே நான்
தாயில்லாப் பிள்ளைபோல் வாடினேனுன் சேயே துஷ்ட
வஞ்சகன் மகுடசம்மாரி நீயே சிங்க
வாகனமீதேரி வந்தெனைக் காப்பாயே தீதா ()

மீனப்பிகையென விளக்கும் குக்ஷி மாக்ஷி உன்
காதினில் ஜொலிக்குங்கம்மல் காக்ஷி காக்ஷி சொல்ல
லாகுமோ ஜோதி சொரூபம் ஆக்ஷி ஆக்ஷி புக
ழாய் விளங்கும் சத்தியுமை பேக்ஷி பேக்ஷி தீதா (கோ)

பாவத்தை யகற்றுமலர்த் தாழி காளி பால்
பழமோடு புசித்துவனக் கூலி கூலி தினம்
பாடியே புகழ்ந்தேன் திரி சூலி சூலி சிறு
பாலன் கருப்பண்ணனையாள் நீலி நீலி தீதா (கோ)

---

தசரதராஜகுமாரா-யெ. மெ-தா. ஆ.

பல்லவி.

பர்வதராஜன் குமாரி அதிதீரி அலங்காரி அருள்வீரி.

அனுபல்லவி.

அரவமணிந்திடும் பரமன்தன் பாரி
அரி திருமாலின் தங்கை தேவிமகோதரி
வணங்கினேனுந்தனை வரமேதந்தாதரி
மானிலம்புகழ்தாயே வாரும் அருள்தாரும் கண்பாரும்
எனைக்காரும் (பர்)

மாதவர் முனிவர் வணங்குமா காளி
மாதாநீ யல்லாது வேறேயார் சூலி
ஆனந்த நடனம் புரியும் கபாலி
அம்பிகை மதுரைமீனாக்ஷி அரசு சூக்ஷி கிருபைகாக்ஷி
அருள் மாக்ஷி (பர்)

நான்முகன் பணியும் நாரணி வந்து
நாயேன் கடைத்தேற கிருபைசெய் யுகந்து
பக்தியாய்க் கருப்பண்ணன் பாடினேன் புகழ்ந்து
பாலர்களுடனே கொண்டாடி பஜனைபாடி உனைத்தேடி
துதித்தேன் கூடி (பர்)

---

அதிவிநோத கிளிகள் பேசும்-யெ. மெ.

பல்லவி.

செந்தமிழ்ப் புகழ்ந்துபாடும் மைந்தன் கருப்பண்ணன் தேடும்
மானிலத்தையாளும் கோப்பு மாரி வீரி நம்மை
யாண்டருளும் துர்க்கைரண சூரி நாரி துஷ்டர்
தன்னைவாட்டும் சூலங்கொண்ட தீரி கௌரி திரு

நீலகண்டன்பாரி இடமேரும் சடாதரி கதிபெறவே
தினம்வர என்முனம் துதிசெய்துமே மகிழ்ந்துநாளும் ()

மாயமான வாழ்வை நம்பி பூவுலகில் நானலைந்தேன்
மாதாநீயல்லாதுகதி ஏது ஏது நாயேன்
ஏழை எந்தன்மீது சூது வாது வாது செய்தால்
தொண்டனானென்ன செய்குவேன் ஓது ஓது எந்தன்
வினையணுகிடாது உந்தன்துணை தாருமிப்போது பய
பக்தியுடன் நித்தமுன்னை சித்திபெறவே மனநாடியும் ()

---

திருவாவினங்குடியிலே-யெ. மெ.

பல்லவி

மாயன் சகோதரியே மனது நொந்து சேயன் வாடி
னேன் தாயே (மா)

அநுபல்லவி

பாலன் படுந்துயரம் பார்க்காது தாயிருந்தால்
பாருலகில் வேறுகெதி பாவியெனக் கேதம்மணி (மா)

சிர்ச்சபை நடேசன் பாரி சிங்கவாகனி மாரி
பக்தியாப் பணிந்தேன் கோரி பாவவினைகள் தீரும்விரி ()

முத்தரசர் குலத்திலகன் எம். கருப்பண்ணன் பாலன்
செந்தமிழ் பாடினேனே திருவருள்பெறவே நானே (மா)

---

பக்ஷமிருக்கவேணும்பத்தாவே-யெ. மெ.

இராகம்-காபி-தாளம், ஆதி

பல்லவி

ஆயிமகமாயி மாகாளி ஆளும்
ஆயிரங்கண்ணுடைய திரி சூலி (ஆயிமக)

அநுபல்லவி

தாயியுனையன்றி வேருகெதியில்லை
தனையனைக் காருமம்மா திருநீலி தினம்
உனைமறவேனம்மா வனக்கூலி (ஆயிமக)

மகுடசம்மாரியே மாதங்கி கௌரியே
வந்தருளுந்தன்பாதம் வணங்கினேனே அம்பாள்
எந்தன் வினையதனை தீர்ப்பாய் தானே (ஆயிமக)

அகிலமும் புகழும் ஆயிவந்தாளும்
அம்மா கருப்பண்ணன் செந்தமிழ்பாடி யான்
நம்பித் தொழுதேன் வரம் பெற நாடி (ஆயிமக)

---

ஸ்ரீராமபாதமா-யெ, மெ.

இராகம் அமிர்த வாகனி, தாளம் ஆதி

பல்லவி

வா மகமாயி யே மாதங்கி கௌரியே மாசிவன் பாரியேநீ (வாமக)

அநுபல்லவி

மாதவர் முனிவர் வணங்குமகேஸ்வரி
வாட்டியே மகுடாசூரனைவி வாங்குந்தீரியே நீ (வாமக)

சரணங்கள்

இன்னும் என்மேல் வர்மமா இறங்காது தர்மமா
உன்னடி போற்றும் பாலனைக் காரம்மா
சிங்கவாகனியே திரி சூலி காளியே
செந்தமிழ்க் கருப்பண்ணன் தினந்துதித்தேன் கோரியே நீ (வா)

---

செந்தமிழுலகினில்-எ, மெ,

இராகம் செஞ்சுருட்டி, தா-ஆதி

பல்லவி

மண்டல மெங்குங் கியாதி கொண்டு விளங்குங்கோப்பு
வளநாட்டிலமர்ந்தமாரி மகுட சம்மாரி
மாசிவன் மகிழும்பாரி தினம்
மாதவர்யோகிகள்தேடிடும்சூக்ஷிதாமரைமலரினிலுதித்திடும்காக்ஷி
மகேஸ்பரி கிருபாகரி அருள் நிறைந்த
மாதங்கி சத்தி கங்காதரி (மண்டலம)

பேதை மதியாலே நான் பெண்டுபிள்ளை மேலாசை
கொண்டு அலைந்திட்டேனம்மா பொருளாசை கொண்ட
நாயன் தனைக் கண்பாரம்மா [முன்னால்
சூரனைவதைத்திட்ட சுப்பரமணியனுக்குவேல்
கரம் தொடுத்திட்டவிமலியே எந்தனுக்கு
முத்திக்கிடமும்பாரம்மா முக்கண்ணனுடன்
இடமேரி வந்து காரம்மா (மண்டலம்)

பச்சைமால் தங்கையரே பால் பழம் தேங்காய் துளிர்
வெற்றிலைபாக்குடன் வைத்து கற்பூர தீப
தூப நைய்வேத்யமும் வைத்து பின்னால்
துடர்வினையகற்றிடும் சோதியே கியாதியே
படமணி கங்கணி திருமீனலோசனி பாதம்போற்றினேன் நாரணி
க்ருப்பண்ணனை யாண்டருள் பரிபூரணி

---

அருமையிலுமருமை-மெ மெ.

இராகம் பியாக், தாளம் ஆதி

பல்லவி

சாமுண்டியீஸ்பரி சடாதரி சத்திகௌரி
சங்கரனுடன்நடனம் புரியும்வீரி (சாமுண்டி)

தொகைபரா

சதுர்முகன் வணங்கிடும் தாமரை மலரிலுதிக்கும்சர்வஜீவதயாபரி
மதுரையாழ்பாண்டியன் குடல் வாங்கி கொன்றிட்ட மாயாசோதி
சொரூபக்காரி

பல்லவி யெடுப்பு

சூலி வெண்டோலி நீலி கபாலிகூலி
திருமாலுடனுதித்த மாகாளி (சாமுண்டி)

தொகையறு

மகுடாசூரனுயிரை வாட்டி வதைத்திட்டமலைமகள் மாக்ஷி நீயே
தகுந்ததோர் வனசிம்மாசனத்திலிருந்துதரணியாள் மீனாக்ஷிதாயே

பல்லவியெடுப்பு

பாதம் பணிந்திடும் பாலகன் கருப்பண்ணன்
பாடினேன் செந்தமிழ் எழியேன் நான் (சாமுண்டி)

---

ராஜவிசுவாசலாலா-யெ. மெ.

பல்லவி

மாரி மகமாயி யே பகவதியே அம்பாள் பகவதியே (மாரி)

அநுபல்லவி

தீரியே வாராய் திருவருள் தாராய் (மாரிமக)

தொகையறு

நேரினில் சேவை தருவாயென்று நித்தியம் துதித்தேனுன்சேயே
நேசி உல்லாசியே நீ எனைக் காப்பாற்ற நோக்கியே வாருந்தாயே

சரணங்கள்

நந்தியின் மீதேரும் சுந்தரன் பாரி
மைந்தன் கருப்பண்ணன் வணங்கும் கெப்பிரி
நாயேனைக் காப்பாற்று
தாயே என் வினைமாற்று (மாரி)

---

பாண்டியனீன்ற மீனாக்ஷி-எ. மெ.

இராகம் இந்துஸ்தான் தோடி, தாளம் ஆதி

பல்லவி

ஊரெங்கும் புகழும் வளநாடு உமையவள்
வாளும் கோப்பு நாடு (ஊரெங்கும்)

அநுபல்லவி

நீரெங்கும் பெருகும் வயலோடு அமைந்ததே
பார்த்திடத் தேடு (ஊரெங்கும்)

தோகையறு

ஊர்தோறும் விளையாடும் உமையவள் கிருபாகரி பரமசிவன்பாரி
பேர்புகழ் கோப்பு மகமாயியென நாட்டினிலமர்ந்தாளும் கொள்
[ளிக்கண் முத்துமாரி

பல்லவி யெடுப்பு

மாரியின் பாதம் வேண்டினால் தீவினை
ஓடும் அருளினால் (மாரியின்)

அனுபல்லவி எடுப்பு

கூறிய கருப்பண்ணன் தன்னால் இரண்டாம்
பாகம் வரும் பின்னால் ஊரெங்கும்

---

திருவிழா அலங்காரம். ஆண்டிப்பண்டாரம்-யெ. மெ.

அனுபல்லவி எடுப்பு அடிக்கடி பல்லவி யெடுப்பு.

நாரணன் தங்கை மாரி நன்மையுள்ள கோப்பு நாட்டில்
விளங்கிவரும் தேர்மகிமைவிபரமதாய் சொல்வேன்பாலன்
பிரியமாய்கேளும் வாங்கிப்படித்துமே மகிழும் (தமிழ்பிரியமாய்)

வருஷாவருஷந்தோறும் வருகுஞ்சித்திரைமாதந்தன்னில்
முக்கம்பம் நட்டுக்காப்புக் கட்டியே அலங்கரிப்பார்
நீர்களும் சொரிவார் தினம் பூவுஞ்சாற்றிடுவார்(ஜனம்நீர்)

இருபத்திரண்டாம் நாளில் எட்டுக்கரைப்பட்டயதார்
படுகளம் நடத்திவரும் பகர் சொல்ல முடியாக்கும்மி
அடிப்பதே கூட்டம் தாசிநாடக ஆட்டம்பெண்கள்கும்மி

திங்கள்கிழமை இரவில் சென்றுவிட்டால் படுகளமும்
செவ்வாய்க்கிழமையிரவில் ஜெகசோதியாய்மல்லிகைப்பூந்
தேரே சிங்காரம் மாரி வருகும் கெம்பீரம் (பூந்தேரே)

பூதவாகனமேறும் புதன்கிழமை யிரவினிலே
புஷ்பமாரி பொழிந்து ஆயி புகழ்ச்சியுடன்வரவே வாத்யம்
நாக சுரமே பஜனைபாடுஞ் சங்கீதமே (தவுல்)

வியாழக்கிழமை யிரவில் வெள்ளையன்னப்பக்ஷி ஏறி
விமலர்பாரி வருகும்போது வீதியிலே ஜனதிரளென்ன
ஜனங்களே கூட்டம் பாலர்நடி ஓயிலாட்டம் (லக்ஷஜனங்)

வெள்ளிக்கிழமையிரவில் விமலி சிங்கவாகனத்தில்
மகுடா சூரனைக்கொன்ற வாள் சூலங் கையில்தாங்கி
வருவாள் கண்பார்த்தால் நம் முகமெல்லாம் வேர்த்தால் மாரி

என்னால் சொல்ல முடியா யீஸ்பரியின் சொருபமதை
ஏழைஎன்னால் இயன்றமட்டும் எடுத்துரைப்பேன் நேர்மகிமை
இன்னுமே நீரும கோப்பில்வந்து கண்பாரும் (பெரியோர்)

சனிக்கிழமை யானைமீதில் சங்கரி வருகும்போது
சகலபேரும் ஆனந்தத்தால் சங்கொலி போல் குலவையிட்டு
அபிஷேகம் புரிவார் அம்மன் தெரிசனம் பெருவார் (பூஜை)

ஞாயிற்றுக்கிழமையிரவில் நாரணி காமதேன்
வாகனத்தில் வருகும்போது வானுலகு தேவரெலாம்
ஆனந்தங் கொள்வார் அம்மாள் பெருமையைப் புகழ்வார்
(கெம்பீர)

கோடிப்பிரகாசமுள்ள குதிரை வாகனமீதேறி
திங்கள்க் கிழமையிரவில் தேவி வரும் காக்ஷி என்னால்
சொல்லலாகாது ஜனத்தை எண்ண இயலாது (என்னால் சொல்)

மாலையைச் சிரையெடுத்த வண்ண முடி காத்தவனார்
கழுவேத்தம் பார்க்கவரும் கணக்கடங்கா ஜனங்களையும்
கருப்பண்ணன் சொல்வேன் லக்ஷம்கோடி எனப்புகழ்வேன்
(பாலன்)

செவ்வாய்க்கிழமை முழுதும் சிங்காரத் தண்ணீர்ப் பந்தல்
உபயமிருந்து மாரி உன்னதமாய்ச் சாயந்திரம்
தேரேரிவரும் சிங்காரமே பாரும் (மாரி)

கரகம் தலையில் வைத்து திருநடனம் புரிகுவோரும்
பக்தியுடன் அலகு குத்திப் பதம் பெறவே வருகுவோரும்
மேள ஆர்ப்பாட்டம் மிட்டாய்க்கடைகள் ஏதேஷ்டம் (தவுல்)

மூன்றும் நாள் மஞ்சள்நீர் முத்துமாரி ஆடிய பின்
கோப்பிலுள்ள ஜனங்களுமே கொண்டாட்டமாய் மஞ்சள்நீரை
விளையாடி வருவார் அத்தான்மேலே ஊற்றிடுவார் (கேலி)

தெரிந்து தெரியாமலும் சிறுவன் மிகப்புகழ்ந்ததிலே
தெரிந்தோர் பிழைபொருத்து சேயனைப்போல் ஆசிகூர்வீர்
வாழியே வாழி கருப்பண்ணன் பாட்டு நீடுழி (எங்கும்)

மாரியம்மன் பக்தரஸ கீர்த்தனை
முதற்பாகம் முற்றிற்று.

உ

வேலுமயிலும் துணை.

# சுப்பிரமண்யர் கீர்த்தனங்கள்.

---

## விநாயகர் விருத்தம்.

அத்திமுகாசத்தியருள் புத்திரனே வித்தைக்கொரு முதற்
பொருளே
பக்தியோடு முத்தரச குலத்தினிலுதித்திடும் எம். கருப்பண்ணன்
சித்திபெற இத்ததி யுனைத்துதித்தேன் பக்தன்புகழ்
நத்தமிழ்க்கே நத்தியேநீ உத்தமனே நித்தியமு மருள்தருவாய்

---

## சுஜன ஜீவனு-யெ. மெ.

இராகம் கமாஸ், தாளம் ரூபகம்,

பல்லவி.

அடிபணிந்தேனே எனையாள் கணேசனே உனை (அடி)

அனுபல்லவி.

மிடிதிருங்கோனே மீனாக்ஷி பாலனே
மிகு மும்மதம் பொழிந்து என்முன்
கஜமுகா வாரும் உனை (அடி)

சரணங்கள்.

தாயில்லாத பிள்ளையைப்போல் தவிக்கின்றேன் நீதா
தவமுனிவர் குருவே நீரும் வா கணநாதா
சேயின்மேல் வாதா மூஞ்சூர் ஏறும் பொற்பாதா
சேவடியைத் தாரும் தமிழ் புகழ்ந்தேன் கருப்பண்ணன்
உனை (அடி)

---

## மாத்தாடப்பாரதேனோ-யெ. மெ.

இராகம் கமாஸ், தாளம் ரூபகம்.

பல்லவி.

வாருங் கண பதியே நீரித் ததியே (வாரு)

அனுபல்லவி.

கோரும் வரமதனைத் தாரும் தயாநிதியே (வாரு)

சரணங்கள்.

பாருங்கடைக்கண்ணாலே பாம்பணிந்தோன் மகனே
பூர்வத்தில் யான்செய்த பெருவினை மூஷிகனே
போக்கியே துயர் நீக்கி ஏழையை
நோக்கி யாழுந் தபோதனர் குருவே
நண்பனே ஒற்றைக் கொம்பனே
ஆனை முகவனே பானைவயிரனே என்முன் (வா)

வல்லபை மனோகரா வாதுவன் ஐங்கரா
அல்லலடைவது அழகோ கிருபாகரா
அடியவனுந்தன் அடிபணிந்தேனே
இடியப்பம் அவல் கடலை தின்போனே
கருப்பண்ணன் புகழ்ந் தியம்பும் நற்றமிழ்
கஜமுகா கமழ் தகமுமே மகிழ் (வாரு)

சரஸ்வதி விருத்தம்.

வீணைகரபாணிவாணி வேதந்தன் நாவில்வாழ் கல்யாணி
மானைத்தரித்த யீசன்மகன் குகன்மேல் கீதம்பாட
அன்னவாகனமீதேறி அடியவன் நேரில் வாரும்
உன்னடிபணிந்து போற்றி உள்ளத்திலிருத்திவைத்தேன்

---

அத்திமுகவனே என்ற-மெட்டு

கண்ணிகள்.

சத்தியலோகவாசனி தாமறை யுல்லாசனி
சத்தியைப் பணிந்தேன் யான் நல்வரந்தந்தாளுவாய் (ச)
வீணை சுரக்கியானியே வேதன் மகிழ்பாரியே
தாளக் கியானம் யானறியேன் தர்க்காத்தருள் கலைவாணியே (ச)
தஞ்சமென்று உந்தன் தாழை சந்ததமும் போற்றினேன்
மைந்தன் கருப்பண்ணன் நாவில் வந்து பிரகாசிப்பாய் (ச)

---

## விஷ்ணுவின் துதி

### ஸ்ரீ ராகம் தாளம் ஆதி

பல்லவி.

வீரகோதண்டன் துணையே விரி
கடலில் துயிலும் ஹரிதிருமாலெனும் (வீர)

அனுபல்லவி.

கோர அரக்கர் காலன் தீர தசரதர்பாலன்
கொடுந்தாடகையை யொருநொடிதனில் மடித்திட்ட (வீர)

சரணங்கள்.

மாமுனிவர் வேள்விகாத்து மாதகலி சாபந்தீர்த்தோன்
மாநகர் மீதிலேகி மாசிவன் வில்லை வளைத்தோன்
ஜெனகன் சந்தேகந்தீர்த்து சீதையை மனம்முடித்தோன்
ஜெய ஜெய ரெகுராமர் திருவடியே சரணம் (வீர)

துதிக்குஞ் சிறுவனுக்குந் திருவடியைத் தருவாய்
துரவாமுன்னமே வந்துன் தொண்டனை யடிமைகொள்வாய்
கருப்பண்ணன் புகழ்ந்திடும் ஸ்ரீராகத் தமிழ் கமழ்வாய்
கரியின் முறையைக் கேட்டு முதலை சிரமறுத்த (வீர)

---

அமுதமுதேக்கோ–யெ, மெ.

பல்லவி.

மண்ணளந்து வெண்ணையுண்ட மாயன் பெருமாளே (மண்)

அனுபல்லவி.

மாயன் பெருமாளே சேயனெனையாளே (மண்)

சரணங்கள்.

சங்குசக்கரக் கையா தசரதரீன்ற ராமா
சாம்பசிவன் தனுசை தகர்த்த ஜானகிபூமா (மண்)

பஞ்சவர் தன்னைக் காத்த ரஞ்சித பொற்பாதா
தஞ்சமெனத் துதிக்கும் பஞ்சை என்மேல் வாதா (மண்)

கஞ்சன் தனை வதைத்தக் கண்ணா மணி வண்ணா
பண்ணாகமீதுயிலும் சியாமளவர்ணா (மண்)
அன்னை தந்தையும் நீயே ஆவித் துணையும் நீயே
அன்பன்கருப்பண்ணனருள் தமிழைக்கேள்ப்பாயே(மண்)

---

இன்னும் நாதன் வரக்காணேன்-யெ-மெ
பல்லவி.

கண்ணாக் கருங்கடல் வண்ணா உனை நானே பணிந்தேனே (க)
இன்னும் நீர் வாது செய்வ தகாது
இரண்யன் தனைவதைத்த மாயா செவ்வாயா அன்பர் சகாயா (க)
அலைகடல்துரும்புபோலானேன் நோகலானேன் சேவைகாணேன்
விலைமாதர் வலையில் வீழாமல் உலகில்
வினைதீரும் ஜானகிபூமா ரெகுராமா பரந்தாமா (க)

---

சிவபெருமான் ஸ்தோத்திரம்.
நாதபிந்துகளாதி நமோ நமோ-யெ-மெ.

ஆதிசதா சிவநாதா நமோ நம
பாதிமதி சூடும்போதா நமோ நம
மாலயன் காணா பாதா நமோ நம பரமேசா
யானையுரித்தணி சித்தா நமோ நம
மானைக்கரத்தணி கர்த்தா நமோ நம
ஆலகால முண்டபித்தா நமோ நம திரிசூலா
மாரியாடும் நடராஜா நமோ நம
பாரிமுப்புர மெரியீசா நமோ நம
காசிவாழ் விஸ்வேசா நமோ நம மகாதேவா
சத்தியுமை மநோகரா நமோ நம
பக்தர்க்கருள் கிருபாகரா நமோ நம
கருப்பண்ணன் போற்றும் சுந்தரா நமோ நம அருள்தாராய்

---

போதாதிருக்கூடல் பூமிநாதா-யெ-மெ.
இராகம் பியாக் தாளம் சாப்,
கண்ணிகள்,

மாமதுரையாளும் சொக்கநாதா திரு
மாதுமீனாக்ஷியுமை சமேதா முன்

பங்கயன் மாலறியாத பாதா ரிஷி
பண்ணவர் முனிவர்பணியும் வேதா மாமதுரை
அம்பலந்தன்னில் நின்றாடியவா பட
அரவந்தனை நகைபூட்டிய வா உன்
இடபவாகனத்தை யோட்டியேவா என்
இடர்தீர்த்து உன்பாதம் கூட்டிபோவா (மா)

சங்கு சக்ராயுதன் மைத்துனா ஜோதி
சந்திரனைச்ச டை யணிபூரணா கை
மான்மழு சூலம் பிடிவாரணா சிறு
மைந்தன் கருப்பண்ணன் புகழ்காரணா (மா)

---

அள்ளியள்ளி நீர்குடிக்கும்-எ-மெ.

சம்போ கங்காதரா சத்திமனோகரா தர்க்கத்தருளும் சங்கரா மான்மழகரா
சந்திரனைச் சடைதனிலணிந்தவா சுந்திரனே சிரமாலையணிந்தவா
தில்லையம்பலந்தன்னில் திருநடனம்புரிந்தோனே திரிபுரமதை யெரித்தோனே கரியுரித்தோனே
திருமதுரைப் பதியில் வளர்ந்திடும் சிறுபுலித்தோலுடையா யணிந்திடும் (சம்)
நந்திவாகனமீதேறிவா சொக்கநாதா நாளுமடியேன் மேல்வாதா அருள் போதா
நந்தகோபன் சொந்த மைத்துன மைந்தன் கருப்பண்ணன் வணங்குமுக்கண்ணா (சம்)

---

பாண்டியனீன்ற மீனாக்ஷி-யெ-மெ.

பல்லவி.

பாரினில்விளங்குஞ் சிவாக்ஷி பக்தர்கள் வணங்குங் காமாக்ஷி (பா)

அனுபல்லவி.

நேரினில் தெரிசனங்காக்ஷி தருகுவாய் மதுரை மீனாக்ஷி (பா)

தொகையறா.

பாம்பாபரணம்பூணும் பரமன்தன் பாரியே பங்கையன்வணங்குஞ் சோதி
நம்புமுன் பாலன்மேல் கிருபைகண்ணோக்கியே நன்மொழிமன தில் போதி

பல்லவி.

நாடினேன் பாலனுன் சேயே மனது வாடினேன் தாயே
பாடினேன் கருப்பண்ணன் நீயே பதமலரடிதருவாயே (பா)

தெள்ளு தமிழுக்குதவுசீலன்-யெ. மெ.

பல்லவி

ஆதிவயலூர்க் குமரவேலா எனையாண்டருளும் சத்தியருள்பாலா
தந்தை ஆல முண்ட நீலகண்டன் காதினிலுபதேசித்த
சீலா மறை மூலா (ஆதி)

பார்க்கவேணும் பார்க்கவேணும் என்று குகன்பாதசேவை
காணவென்று சென்று
முன்னால் பண்ணினதோர் கர்மவினை தன்னையே யகற்றுமென்று
நின்றேன் கதி யென்றேன் (ஆ)

பச்சைமயில்மீதமர்ந்த சோதி நான் பார்த்துமே தெரிசித்தேன்
நற்கியாதி
கொண்டபன்னிருகை சுப்ரமண்யன் தன்னையே காணவே பாவம்
போகும் துயர் ஏகும் (ஆ)

சர்க்கரையும் முக்கனிபால் சேர்த்து காரும் சண்முகா சண்
முகா என ஆர்த்து
எம் கருப்பண்ணனைக் காத்தருளும் மால் மருகா முருகா என
பணிந்தேன் தினம் புகழ்ந்தேன்

---

துலங்கு செம்பொன்_யெ. மெ.

இராகம் செஞ்சுருட்டி-தா. ஆ.

பல்லவி

கடிக்கும் புள்ளி மாமயிலேறியே வா வா எனது முன்னே
வள்ளி தெய்வானை மோகனே சுப்பரமண்யனே வள்ளி

உனை நம்பினேன் பாதத்தண்டை கபீரென வா வா எனது
முன்னே
வள்ளி தெய்வானை மோகனே சுப்ரமண்யனே (வள்ளி

அமைந்த வேலும் பளீர் பளீரென வா வா எனது முன்னே
வள்ளி தெய்வானை மோகனே சுப்ரமண்யனே (வள்ளி)

அடிமையின் றுயர்கெடப் பழனியங்கிரிவிட்டு வா வா என்து முன்னே
வள்ளி தெய்வானை மோகனே சுப்ரமண்யனே (வள்ளி)

சரணங்கள்

புகழுங் கருப்பண்ணன் துணையனுகூலா
பூமியை வலம் வந்த கதிர்வடிவேலா
அகங்கொண்ட சூரரை யழித்திட்ட காலா
ஆனந்த நடன கெம்பீரியின் பாலா
அண்டினேன் ஆண்டருள்சீலா உன்னிரு பாதம்
வேண்டினேன் மாமறை மூலா (நடி)

---

அருமையிலுமருமை-எ. மெ,
இராகம் பியாக்-தா. ஆ,
பல்லவி

ஆலகாலன் சீலா மாமறை மூலா
அன்னை தெய்வகுஞ்சரி வள்ளி மணாளா (ஆல)

தொகையறு

ஆங்காரமாகிய ஓங்கார வேல் தாங்கி அமரர்கள் சிறை மீட்டிய புண்ணியா
பூங்காவில் வேங்கைமரமாய் நின்று சோங்குசுணை நீருண்டு வள்ளியை மணந்த சுப்ரமண்யா (ஆ)

பல்லவி எடுப்பு

மாங்கனி வாங்கப்புவி வலம் வந்த வீரா
நீங்காத கர்மவினை தீர்க்குஞ் சிங்காரா (ஆ)

தொகையறு

அருணகிரி அருளிய திருப்புகழ் பண்ணுயிரங் கோடிச்சிங் தலங்காரா
கருணைப்பிரகாசனே அறுமுகத் தெய்வமே கார்க்கவா ஆதி வயலூரா (ஆ)

பல்லவி எடுப்பு

திருப்புகழெங்குவிழங்கும் அருள்ப் பிரகாசா
கருப்பண்ணனனுதினம் துதி செய்யும் நேசா (ஆ)

தக்கப்பராங்கல்லைத் தூக்கி-மெ. மெ.

கண்ணிகள்

குன்று தோறாடுங் குமரையா ஏனே
யாண்டருளும் பன்னிருகையா உனே
வேண்டித் துதித்தேன் சுப்ரமண்யா என்
வினைகளைத்தீரும் முருகையா (கு)
பெண்டுபிள்ளையின்மேல் ஏக்கம் நாயேன்
கொண்டு அலைந்தேன் கெட்ட தூக்கம் உந்தன்
பாதஞ் சேருமொரு நோக்கம் போதித்
தருள் மனதினிலூக்கம் (கு)
செந்தமிழ்க் கருப்பண்ணன்பாடி உன்
திருவருள் பெற்றிடக் கொண்டாடி தினம்
ஸ்தோத்திரம் புரிந்தேனுன் கோடி உந்தன்
தொண்டனைக் கார்க்கவாரும் நாடி (கு)

---

எங்கும் புகழ் மாமா-மெ. மெ.

சேவர்க்கொடியோனே உனைத் தாவிப் பணிந்தேனே செஞ் (சே)
பாவம் தீர்த்தரு ளறுமுகனே உன் பாதஞ்சேரவே வாழும்
பெறவே (சே)

கடம்பணி மணிமார்பா தென் பழனியில் வாழும் இடும்பா
சூரன் உடலைக் கூறிட்ட சிலம்பா திருமாலின் மருக முருகனுனை()

திருவருள் தாரும் ஆண்டி அனுதினமுமுனைக் கொண்டாடி
பக்தன் கருப்பண்ணன் தமிழ் பாடி புகழ்ந்தேன் பணிந்தேன்
வாந்தா கந்தனே (சே)

---

அம்பிகா உன்மகன் குகன்-மெ. மெ.

இராகம் தேசிக தோடி, தா. ஆ.

பல்லவி.

சண்முகம் பழனி மலையூரா
வண்ணமா மயிலேறுங் குமரா (சண்)

அனுபல்லவி.

என்முகம்பார் சிங்காரா
ஏழை நானீ ராறு கரா

உன்முகம் பார்க்கத் தீரா
ஓடித்தேடி வாடினேன் சிவ (சண்)

சூக்ஷி மீனாக்ஷி பாலா
சூரரை வதைத்த வேலா
காக்ஷியாய் விளங்குஞ் சீலா
கந்தா நந்தா செந்தியில் வளர் (சண்)

திருப்புகழ் கமழ் கடம்பா
விருப்பமா யாள் சிலம்பா
கருப்பண்ணன் தமிழ் கேள் நண்பா
புகழ்ந்து மகிழ்ந்து பணிந்தேன் பாலன் (சண்)

---

முருகனிடம் போய் முறை சொல்வாய் குயிலே-எ. மெ.

இராகம் காம்போதி, தாளம் ரூபகம்.

பல்லவி.

முற்றிலுமென்தன்முறையைக்கேள் முருகாமுருகாமுருகா
மும்மதம்பொழி தும்பிக்கையோன் தம்பிரான்
நம்பினேன் ஏழை (முற்)

மதுடங்கள்.

முடிமீதினில் நதிமாதனி
நடராசனின் மகனே இனி (முற்)

குமரனே கழுகுமலைப்பதி
சமரனே அமரர் சேனாபதி (முற்)

கோகிலம்போல் நடி மாதரால்
சோகிக்க லாகினே னாதலால் (முற்)

மோகப் பிணியதை விலக்கிநல்
விவேகம் புகலென நிதமும்சொல் (முற்)

அனுபல்லவி.

நல்மொழி மனதினிலுன் மொழியூட்டு
பொல்லாத தீவினை யகற்றியே யோட்டு
முள்வழி நடவாமல் நல்வழி காட்டு
புல்லனை உன்பாதஞ் சேரவே கூட்டு

புரந்திர னிடர்க்கொரு யோகனும்
சூரனை வதைசெய்த காலனும்
பிரபல மாமயில் வாகனும்
குறமகள் வள்ளியின் மோக னும்
சேவர்க்கொடியோனே வடிவேலா அடியேனின் குறை (முற்)

சரணங்கள்.

சித்தசவேள் மைத்துணனே
சத்திவேல் மகுத்துவனே
முத்திக்கொரு வித்தகனே
சித்தனுக் குரைத்தவனே

சிங்காரப் பழனியின் வாசா
எங்கும்புகழ் குமரேசா
சங்காளர் மருகனே முருகனே
குங்கும வள்ளியின் மோகனே
பக்தன் கருப்பண்ணன் நித்தம் உத்தமா உன்னிடம் சொல்லு ம்

---

சிவசண்முகா உன்னிருதாழ் எண்ணியே-யெ-மெ.
இராகம் தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சம்புவேல் என்மனது வெம்புதே வுனைகாணுப்புலம்புதே
ஏழைதுயர் தீர்த்தருள் புரியு மையா (சம்)

அனுபல்லவி.

சம்ரம யூரா சாக்ஷாத் குமாரா
சமர்த்தால் அசுரரை மடித்தாய் வேலினுல்
பிடித்தாய் சேவலங்கொடி கரமீதினில் (சம்)

பல்லவி யெடுப்பு.

நம்புமுன் தொண்டனென் முன் வம்புசெய்யாது வாரும்
அம்புவிமீதுகாரும் கரியமால் மருமகன் முருகையனே

அனுபல்லவி.

நோக்கியுன் தாழை பணிந்தேனிவ்வேளை
புகழ் கருப்பண்ணன் தமிழ் அதிமதுராங்கமழ்
செஞுநீர்வயல் சுற்றருணுபுரிவளர் (சம்)

---

பூமண்டலங்கள் கொண்டுபுகழ்-யெ-மெ.

கண்ணிகள்.

தெண்டாயுதபாணியே தேசமெங்கும் கீர்த்தியே
கொண்டாடினால் பாடினால் பாவங்கள் நிவர்த்தியே (தெ)
மன்றுலநின்றாடியோன் மகன் மாயூரமேறியே
வருகுவார் அருளுவார் ஏழைமுகம் நோக்கியே (தெ)
பாவலன் கருப்பண்ணன் பாடினேன் புகழ்த்தியே
பக்தியாய் நத்தியே பாதத்தை வணங்கியே (தெ)

---

மீனாக்ஷி ரம்மண-யெ-மெ

பல்லவி

கந்தப்பனே எனக்காரும் சுப்ரமண்யனே (க)

அனுபல்லவி.

மைந்தன் காமவலையில் மயங்கினேனுலகில்
மதவெறிநீக்கி என்பெருவினை போக்கியுன்
னடிக்கியாளாக்கி ஈராறுகண் நோக்கியே (க)
தெய்வானை நேசா திருச்சந்தூர் வாசா
சிவன்மகிழ்பாலா மறைபுகழ் மூலா
கதிர்வடிவேலா பழமுதிர் சோலை (கந்)
தினமுங் கொண்டாடி கருப்பண்ணன்தேடி
சிந்தை மகிழ்ந்து உந்தனைப் புகழ்ந்து
திருவருள் பெற்றிட செந்தமிழ் பாடினேன் (கந்)

---

ராஜ விசுவாசலாலா-யெ-மெ.

பல்லவி.

பண்டாரவேல் முருகா பழனியாண்டி முருகா பழனியாண்டி (ப)

அனுபல்லவி.

தெண்டாயுதக்கையா தெரிசிக்கும் மெய்யா (பண்டார)

தோகையறு.

அண்டாத சமர்புரிந்து அமரரிடர் தீர்த்த என் அப்பனே
ஆறுமுகனே
அம்புவியை வலம்வந்த சம்ரமாயூரனே அரி திருமால் மருகனே

சரணங்கள்.

அருள்ப்பரங்குன் றினிலமர்ந்த சிங்காரா
கருப்பண்ணான் செந்தமிழ்க் குகந்த கெம்பீரா
அன்பனே யாளுந்தேவா என்றுந் துணைநீவாவா (பண்)

---

திருவாவினங்குடியிலே-எ-மெ.

பல்லவி.

செம்பன்பழனி மாமலையிலே திருவுமையாள்பாலன்
நம்புமடியார்க் கருளும் புவியிலே (செ)

அனுபல்லவி.

கோழி கொடிபிடித்தான் கும்பமுனிக் குரைத்தான்
கூரியவேல் விடுத்து கொடியசூரர் தனைமடித்தான் (செ)

புள்ளிமயிலேரும் மூர்த்தி மெல்லி கன்னி குரத்தி
வள்ளியை மணம் புணர மானைத் தேடிப்போன கீர்த்தி ()

காவடி கோடான கோடி கந்தன் சன்னிதியை நாடி
சேவடியைக் காணவேண்டி தூக்கி வருவார்கள் கூடி ()

சேகண்டி முளங்கும் சத்தம் செவிகளினிக்கும் நித்தம்
ஆண்டி அரோகரா வென்று பாடிவரும் பக்தர் சத்தம் ()

பாலன் கருப்பண்ணன் துதிபண்ணினே னுன் பாதங்கெதி
பாலாபிஷேகா வந்துன் பாதஞ்சேர அருளைப்போதி ()

---

காவடி சிந்து பதம் பாடுவோம்-எ-மெ.

இராகம் பைரவி - தாளம் ஆதி

பல்லவி.

சேவடிகாணமலை நாடுவோம்
சிந்தை மகிழ்ந்து நடந்து அரோகராவென (சேவடி)

தேனபிசேகனும் திருச்சந்தூர் வாசனும்
தேசா முருகேசா கதிரேசா கடம்பாவென (சேவடி)

வள்ளிமணவாளா புள்ளி மயில்வேலா
வாது நீ சூதுசெய்யாது துயரகற்றென (சேவடி)

தேவர்க்குபகாரர் செந்நெல் வயலூரா
தீரா ஒய்யாரா சிங்காரா திருமால் மருகாவென (சேவடி)

ஜென்மப்பிணிதீரும் உந்தன் பதந்தாரும்
சீலா சிவன் பாலா மறைமூலா சிலம்பாவென (சேவடி)

சிந்து தமிழ்பாடி கந்தனடி தேடி
சேர்ந்தேன் பணிந்தேன் மகிழ்ந்தேன் கருப்பண்ணனுனென

---

மன்றுளாடியவா-எ-மெ

ராகம் தேசிகதோடி—தாளம் ரூபகம்

பல்லவி

குன்றிலாடியவா கந்தா குன்றிலாடியவா
பறின்னது குட்டிகளை சென்று கார்த்த அம்பலன் போல் (கு)

அனுபல்லவி

ஒன்றியாய் சூரரின் ஆவிகவர்ந்தவா
ஒருநொடி நேரத்தில் புவிவலம் வந்தவா
நன்றென தந்தைக்குஅருமறை புகழ்ந்தவா
நந்தகோபாலன் மருகனே அந்தரதேவர்க்கதிபனே (கு)

சத்தியருளிய கமல பொற்பாதா
சதுர் முகனைச்சிறை இடுங் குக நீதா
பத்தினி தெய்வானை மகிழ்ந்திடும் நாதா
பரிமளமாமயிலேறிவையே திருப்பரங்கிரியினில் மேவியே(கு)

பாரெங்கும் புகழ் பெரும் பழனியில் நின்றவா
பாவை வள்ளிக்காகத் தினைப்புனஞ் சென்றவா
காவி லவள் தெள்ளும் தினைமாவைத் தின்றவா
கருப்பண்ணன் புகழ் தமிழ்கேட்டு மனதினிலுன்னரு
ளூட்டு (கு)

---

திருபுரமெரித்தவர் சுயம்பெறவாசி-யெ. மெ.

கண்ணிகள்

பாரெங்கும் புகழ்பெரும் பழமுதிர்சோலை
பார்வதியருளிய கதிர்வடிவேலே
பால்பழம் தேன்வைத்து பூசிக்குங்காலே
ஏகுமே பாவம் துயர் போகுமோ (பா

தேவர்கள் துயர்தன்னை தீர்த்த உல்லாசன்
சிவன் செவிக்குபதேச மருத்துவ நேசன்
திசை முகனைச் சிறையிடும்பவனுசன்
தீரனே தேசிகாமயில் வீரனே (பா)

அருணகிரியார் புகழ் திருப்புகழ்க்குகந்தாய்
ஆனந்தமாய்ப்பரங்குன்றினிலமர்ந்தாய்
கருப்பண்ணன் செந்தமிழ்க் கருள்மாலையணிந்தாய்
கந்தனே கடம்பணியா நந்தனே பா (பா)

---

போதாதிருக்கடல் பூமி நாதா-யெ-மெ
இராகம் இந்துஸ்தான் பியாக்—தா-சாப்
கண்ணிகள்

பாலாபிசேகங்க ளானந்தமே தென்
பழனிப்பண்டாரம் சங்குநாதமே இரு
காதினில் கேள்க்கப்பரமானந்தமே என்
கண்ணால் கண்டால் ஜென்மசாபல்யமே (பா)

வானமளாவிடுங் கோபுரமே தேவி
வள்ளி வெய்வானை இருபுரமே வேல்
கானமயிலோடு சிங்காரமே நான்
காணக்காண மனக் கெம்பீரமே (பா)

விண்ணவர் போற்றிடும் வேல்முருகன் மகா
விஷ்ணுவெனுந் திருமால் மருகன் முன்
கண்ணுயிரங்குரை தீர்த்தகுகன் சீர்
கலாபமயிலிலமர் சண்முகன் (பா)

வேலுக்கதிகார வித்தகனும் மறை
வேதனைச் சிறையில் வைத்தவனும் ஆல
காலமுண்டோனுக் குறைத்தவனும் யம்
கருப்பண்ணன் போற்றும் மருத்துவனும் (பா)

---

பழனியாண்டவனே—யெ-மெ,
இராகம் தேசிக தோடி-தா-ரூபகம்
பல்லவி

கதியும் வேருண்டோ உனதிரு
கழலடி தனைத் தினந்துதி முத்தாசர்

குலந்தனில் வந்துதி கருப்பண்ணன்
செந்தமிழ்க் கருள்பதி பழனியங்கிரியமர்வேலனே()

அநுபல்லவி

கதிர் தினைப்புனக் காடுதனிலேகி
கன்னி குறத்தியைக் கண்டுமையலாகி
வதிதையுங் கூவ வேங்கை மரமாகி
வனக்குரவர் வந்தேக ஜெனந்தனில் பண்டாரமாக
வள்ளியிடந்தனில் சென்று தெள்ளிய மாவதையுண்டு
மானே தேனே யானே தானே

தாகமானே நீயதானே
தருவாய் ஜலம்
பெருவாய் சுகம்
அருகாய் வரும்
கரியே பாரும்
மாதேயென தோதாய் மன மாலையிட்டகாத கந்தா (க)

தஞ்சமென்றோர்களின் சங்கடந்தீர்த்தவா
துள்ளும் விமான மயிலில் நடித்தவா
சார சம்சாரக் கவலையகற்றவா
சம்புவேல் யாளெருவு பஞ்சை நம்பினேன் சரவண விஞ்சை
மந்திரபோதனே பாலனை யாண்டிடத் தருணம் இவ்வேளை

சுந்திர னருளிய அரு முகா
வள்ளியைத் தழுவிய சண்முகா
சூர தீர வீர கோர
அசுர ஆர வாரக் குரூர
சேனைகொன்று
வேலாலன்று
தேவர்க்கென்று
துயரேகச்சென்று
தீர்த்தவனே கார்த்தவனே ஏத்தினேனே பாலனுக்கு ()

---

அமுதமுதேக் கோ—யெ. மெ.

பல்லவி,

மண்ணளந்து வெண்ணெ யுண்டமாயன் மருகோனே (மண்)

அநுபல்லவி.

மாயன் மருகேசனே ஞான முருகோனே (மண்)

சரணங்கள்.

தேவர் துயரந் தீர்க்க மேவிய செந்தூரா
சேவற்கொடி பிடித்த சிலம்பணிவீரா (மண்)

கார்த்திகை தீபப் பிரகாசா கதிரேசா
கீர்த்தி தந்து பாலனைக் காத்தருளீசா (மண்)

பூனைக்குட்டி மான்குட்டி தன்னை மணம் புணர்ந்தாய்
பூமியில் கருப்பண்ணன் புகழுந் தமிழ்க் குகந்தாய் (ம)

---

என்ன கேள்வி முறை—யெ-மெ.

இராகம்-பிலகிரி-தாளம்-ரூ.

பல்லவி.

கோப மேனையா கூர்வடிவேலா பார்வதி பாலா (கோ)

அனுபல்லவி.

கோனே மால்மருகோனே வாமுருகோனே ஏழைமேல் (கோ)

சரணங்கள்.

பண்ணவர் துயர்தீர்க்க வேல்கரங்கொண்டவா
பாவியசுரனின் ஆவியை புண்டவா
பரமன்மகிழவே அருமறை விண்டவா
நாரதர்சொன்ன குறவள்ளியைக் கண்டவா
மானே என வார்த்தை பேசத்
தானே யவள் தூரி யேச
வேடா உந்தன் கால நாசக்
கேடா படுபாவி மோசஞ்
செய்யவந்தாயெனக் குய்யமுறையென மெய்யன்மரமானவா ()
யோகியைப்போலவே வேடமுமாறித்
தள்ளாடியவளிடம் பசியெனக்கூறி
வள்ளியளித்திட்டத் தினைமாவை வாரி
யவ்விளியேயுண்டு அப்பெண்ணுளைக்கோரி

தமிழ்நாடு ... சென்னை-600 00.
180515
R2'417 N29

ஆவியது போகு தென
தேவிஜலந் தாரு மென
வாவிநீரை யுண் ணு மெனத்
தாவி முத்தந் தாருமெனத்
தசாதுஎன்றிட ஆனைவந்திட மானுள்தாவிட கூடுஞ்சண்முகா ()

முத்தரச குலந்தன்னி லுதித்திடும்
பக்தியுடனுந்தன் பாதந்தொழுதிடும்
பக்தன் கருப்பண்ணன் பாவத்தைத் தீர்த்திடும்
முத்திசாயுஜ்ய பதவியழித்திடும்
முகமலர்ச்சியுடன்தேடி
அகமகிழ்ந் துனைப்பாடி
பகலிரவுங் கொண்டாடி
பகவதருடன் கூடிப்
பிரசங்கம் செய்திட்டேன் யெங்கும் புகழ்ந்திட்டேன் பொங்கு
பலாபிஷேகா (கோ)

---

பக்ஷமிருக்கவேணும் பத்தாவே—யெ-மெ.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி

கலியுகத்தில் விளங்கும் முருகோனே காரும்
நவிபாம்பில் தூங்கும் ரெங்கன் மருகோனே (க)

அனுபல்லவி.

ஜொலிமயில் வீரா சூர சம்மாரா
சுடர்வடிவேல் கரம்பிடித்தோனே எந்தன்
இடர்தீரும் தந்தை செவிக்குரைத்தோனே (க)
வள்ளியின் மோகனு மதவேளின் மைத்துனு
வானோர் சிறைதவிர்த்த ஜெயலோலா கானில்
தேனமிர்தம் புசித்த மாமூலா (க)
இரங்காது சூதா சிலம்பணி பாதா
இளநீர் தேனபிஷேக மலையாண்டி உந்தன்கழ
லடிபணிந்தேன் கருப்பண்ணன் வேண்டி (க)

---

மேறிஉள்ளதைச் சொல்லுநீ—யெ-மெ.

பல்லவி.

மயிலே உள்ளதைச் சொல்லுநீ புள்ளிகலாப (ம)

அனுபல்லவி.

குயிலாள் வள்ளிதையலாள் கணவன் குமரனேரும் (ம)
சிறுவனுக்கெதிரில்வந்தஜொலிக்கும்வர்ணசிரந்ததோகை
மால்மருகன் முருகன் என்மீதில்வைத்த அன்பதனை (ம)
பாலனைத்தள்ளாமலவர் பாதத்திற் காளாக்குவாரோ (ம)
கருப்பண்ணன் புகழ்செந்தமிழ்காதினில்கேட்டுமகிழ்ந்து

---

சீர்பசுந் தோகைமயிலே-என்ற மெட்டு.

இராகம்-பரசு தாளம்-ஆதி

பல்லவி.

புள்ளிக் கலாப மயிலே புரந்திரன் குறைதீர்த்த குமரனிடம்
நீ போய் சொல் (பு)

அனுபல்லவி.

தெள்ளிய மாவையுண்டோன் சிலம்பந்தனைக் கொண்டாடும்
வள்ளி தெய்வானை லோலன் வடிவேல் பஜனை பாடும்
மைந்தனை ஏழை எந்தனை குகன்
மலரடிக்காளாக்கவே நினைவுறவே நீ போய் சொல் (பு)
மாதர் வலையில் சிக்கி மயங்கித் திரியாமலே
பூதலத்தில் முருகன் பெயரை மறவாமலே
புகழ்பாட எங்கும் மகிழ்ந்தாடநாயேன்
மனதினில்ப்போதி என்று வயலூரானிடம் போய் சொல் (புள்)
அம்புவி தன்னிலேதான் வம்புகொலை செய்யாமல்
சம்புவேல் தொண்டரானப் பக்தரைத் தூசியாமல்
அருளோடு பால் பழமோடு தினம்
அர்ச்சித்தேன் கருப்பண்ணன் அரன்மகனிடம்போய் சொல் (பு)

---

பாரதத்தா அம்பிகை பஜனை பாடுவோம் எ-மெ.

பல்லவி.

பார்வதி சேய் சம்புவேல் பஜனை பாடுவோம்
சேர்ந்து பக்தர் கருப்பண்ணன் தமிழைப் பாடுவோம்(ப)

சரணங்கள்

செந்திலம்பதி கந்தனேகதி எந்தனைவந்து
ஆள் ஆள் ஆளென
வேண்டினும் போற்றுவோம் பழனிக் கதிர்வேலை (பா)

பல்லவி எடுப்பு

சித்ரா பவரணைத் தேரை நாடுவோம்
பக்தியாய் பாற் காவடி கொண்டு

சரணங்கள்

மச்சக் காவடி சர்க்கரைக் காவடி அன்னக்காவடி
கமழ் கமழ் கமழென
நாமெல்லோரும் பூசிப்போம் புகழ்ந்து குமரனே (பார்)

---

தசரதராஜகுமாரா-எ-மெ.

பல்லவி.

கங்காதரனருளும் சேயா கார்த்திகேய தேவர்க்குபாயா
காங்கேயா (க)

அனுபல்லவி.

சிங்காரப் பழனி பதியின்வைபோகனே
சீர்கலாப மயிலமருமுகனே
எங்கும் விளங்கிடும் இனிய சண்முகனே
இதந்தருவாய் பவநாசா கதிரேசா குமரேசா முருகேசா (கங்)

மான்மகளைக்கூடி மகிழ்ந்திடும் லோலா
மாதா தருஞ் சத்தி சுடர்வடி வேலா
தேன் திணைமாவை புசித்த மாமூலா
சித்தசன் மைத்துனா சிலம்பா கமழ் கடம்பா மலைஇடும்பா
அருள்செம்பா (க)

தாயில்லா பிள்ளைபோல் தயங்கி நொந்தேனே
தாணியில் உனதிரு தாழ்பணிந்தேனே
நேயமோடு செந்தமிழ் புகழ்ந்தேனே
நேமிகருப்பண்ணனைக் காரும் கண்பாரும் அருள்கூரும்
வரந்தாரும் (க)

---

மாற்றுட பாரதேனே—எ-மெ.

பல்லவி.

அம்பாள் அயிலாண்ட யீஸ்பரி நம்பினேன் கோரி (அம்)

அனுபல்லவி.

சம்புகேஸ்பரர் பாரி அம்பிகையே ஆதரி (அ)

சரணங்கள்.

எம்பெருமாள் தங்கையே இகபரந்தருவாயே
தும்பிமுகனையீன்ற சோதி சுடரொளியே
துணையென அனுதினமுமே பணிந்தேன்
தனையனையாளுன் திருவடியடைந்தேன்
சாதிமலரணி சோதி நாரணி
ஆதிசம்பூரணி கோதில்லாராணி (அ)
இருபுரம் காவேரியாம் பெருகிடும் சன்னதியாம்
திருவானைக்காவல் கண்டாய் வரும் நன்னிதியாம்
திகழ் சிராப்பள்ளி நகர்தனிலிலங்கும்
புகழ்கோப்பு வளநாட்டினில் விளங்கும்
கருப்பண்ணன் புகழ்ந்தருளும் செந்தமிழ்
விருப்பமாய்க் கமழ்ந்தொரு வரம்புகழ் (அ)

மங்களம்

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே எ-மெ

கண்ணிகள்.

மங்களம் மங்களம் மங்களமே சுப
மங்களம் மங்களம் மங்களமே (மங்)
ஐங்கரன் ஆனை முகவனுக்கும்
அத்தன் சத்தி திருமால் தனக்கும்
பங்கஜமலர் வாழ்பாரதிக்கும்
பூமகள் கலைமகள் பிர்மனுக்கும் (சுபமங்)
பொங்கு பால்காவடி காரனுக்கும்
பூனையுருவான இந்தரன் மகள்க்கும்
பூங்காவில் தினைகாத்த வள்ளியர்க்கும்
புண்ணியன் கருப்பண்ணன் புகழ்தமிழ்க்கும் சுப (மங்)
மங்களமாக இவ்வுலகோர்க்கும்
மாமுனிவர்யோகி யமரருக்கும்
சங்கு ஜெயகண்டி பக்தருக்கும்
சம்பூரணமாகக் கவிஞருக்கும் சுப (மங்)

சுபம். சுபம். சுபம்.

சுப்பிரமண்யர் கீர்த்தனை
முதல் பாகம்
முற்றிற்று.

180515

